[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI

| | |
|---|---|
| Case Number | **CC.No.149/2019** |
| Deposition of | PW.5 |
| Name | : பழனியப்பன் |
| Father's Name/Husband Name | : கருப்பண்ணன் |
| Village | : கோம்பூர் |
| Taluk | : பாப்பிரெட்டிப்பட்டி |
| District | : தருமபுரி |
| Religion | : Hindu |
| Age | : 66 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **20.05.2026**

**A1 ஆஜர். A2 ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கோம்பூரில் வசித்துக்கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும்.

கடந்த 30.07.2019 ம் தேதி நான் எனது சொந்த வேலையாக சாமியாபுரம் கூட்டு ரோடு அருகில் நின்றிருந்தபோது ஏற்கனவே எனது பக்கத்து தோட்டத்தை சேர்ந்த ராமலிங்கம் என்பவர் அவரது ஆடு திருடுபோய்விட்டதாகவும், ஆஞ்சிநேயா என்ற பெயர் பதிக்கப்பட்ட லாரி டிரைவர் தான் திருடி சென்றதாகவும், 2 மாதங்களுக்கு முன்பே என்னிடம் கூறினார்.

நானும், இராமலிங்கமும், சுப்ரமணியம் என்பவரும் சாமியாவுரம் கூட்டு ரோடு அருகில் பேருந்து நிறுத்ததில் நின்றிருந்தபோது இராமலிங்கம் என்னிடம் எனது ஆடுகளை திருடி சென்ற லாரியின் டிரைவர் டீ கடையில் டீ குடித்து கொண்டிருக்கிறார் என ஆஜர் எதிரியை என்னிடம் அடையாளம் காட்டினார். மேலும், அ.பள்ளிப்பட்டி காவல் நிலைய தொலைபேசி எண்ணை என்னிடம் கேட்டு இராமலிங்கம் காவல் நிலையத்திற்கு போன் செய்து தகவல் தெரிவித்தார். அ.பள்ளிப்பட்டி காவல் நிலைய

போலீசார் சிறிது நேரத்திலேயே சாமியாபுரம் பஸ்நிறுத்தம் அருகில் வந்துவிட்டார்கள். இராமலிங்கம் எதிரியை போலீசாரிடம் அடையாளம் காட்டினார். எதிரி என் முன்னிலையில் ஆடுகளை திருடி சென்றதை ஒப்புக்கொண்டார். மேலும் போலீசார் அதை பதிவு செய்தார்கள். பதிவு செய்து என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றார்கள். இன்று என்னிடம் காட்டப்படும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதியான (***ஆடு விற்ற பணத்தில் நான் வைத்திருந்த பணம் ரூ.1500/- ஐ எடுத்து தங்களிடம் ஒப்படைக்கிறேன். என்னை அழைத்து சென்றால் ஆடுகளை ஏற்றிய இடத்தை தங்களிடம் காட்டுகிறேன்.)*** **என்ற பகுதி அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மேலும், அந்த இடத்திலேயே எதிரியிடமிருந்து போலீசார் என் முன்னிலையில் பணம் ரூ.1500/- ஐ கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார்கள்.

இன்று என்னிடம் காட்டப்படம் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு தொடர்ந்த போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 இராமலிங்கம் ஆவார்.

அ.சா.1 சொல்லிதான் இந்த வழக்கின் விவரங்கள் தெரியும் என்றால் சரிதான்.

ஆடு திருடுபோய் ஒரு வாரம் கழித்து என்னிடம் அ.சா.1 தகவலை கூறினார்.

புகாரில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

என்ன வகையான ஆடுகள் என்பது எனக்கு கேள்விப்பட்டு தான் தெரியும்.

நான் ஆடுகளை பார்க்கவில்லை.

ஆடுகளை போலீசார் கைப்பற்றினார்களா என்று எனக்கு தெரியாது.

அ.சா.1 எனது பக்கத்து காட்டுகாரர் என்றால் சரிதான்.

30.07.2019 ம் தேதி காலை 8 மணியளவில் அ.சா.1 ஆஜர் எதிரியை சேலம் பேருந்து நிற்கும் டீ கடை அருகே வைத்து அடையாளம் காட்டினார்.

எதிரியை என்னிடம் அடையாளம் காட்டியபோது மக்கள் கூட்டமாக தான் இருந்தார்கள்.

அ.சா.1 போலீசாருக்கு தகவல் கொடுத்தார். போலீசார் போன் நெம்பர் நான்தான் கொடுத்தேன்.

போலீசார் தகவல் கொடுத்து ஒரு மணி நேரம் கழித்து வந்தார்கள். காவல் ஆய்வாளர் மற்றும் ஒரு சில போலீசார் அங்கு வந்தார்கள்.

போலீசார் எதிரி மற்றும் எங்களையும் காவல் நிலையம் அழைத்து சென்றார்கள்.

நான் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன்.

காவல் நிலையத்திற்கு என்னுடன் அ.சா.2 சுப்பரமணி என்பவரும் வந்தார்.

நான் கையொப்பம் செய்தபோது என்னுடன், அ.சா.2 சுப்பரமணியும் கையொப்பம் செய்தார்.

நான் மொத்தம் 2 கையொப்பங்கள் காவல் நிலையத்தில் வைத்து போட்டேன்.

அ.சா.2 ம் 2 கையொப்பங்கள் காவல் நிலையத்தில் வைத்து போட்டார்.

நான் கையொப்பம் செய்த பேப்பரில் நடந்த சம்பவம் பற்றி எழுதியிருந்தார்கள்.

ஒப்புதல் வாக்குமூலம் 3 பக்கங்கள் இருந்தது.

கைப்பற்றுதல் மகஜரில் என்ன எழுதியிருத்தது என்றால் வழக்கு சம்மந்தமான குறிப்புகள் எழுதப்பட்டிருந்தது.

நான் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்ததை பின்னிட்டு என்னிடம் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை.

ஒப்புதல் வாக்குமூலம் கையால் எழுதப்பட்டிருந்தது.

ஒப்புதல் வாக்குமூலம் யார் சொல்லசொல்ல எழுதப்பட்டது என்றால் அ.சா.1 இராமலிங்கம் சொல்லசொல்ல எழுதப்பட்டது.

அ.சா.1 எனது காட்டுகாரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சிமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர், பாப்பிரெட்டிபட்டி**

[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI

| | |
|---|---|
| Case Number | **CC.No.149/2019** |
| Deposition of | PW.6 |
| Name | : இராமகிருஷ்ணன் |
| Father's Name/Husband Name | : இராஜேந்திரன் |
| Village | : அதிகாரப்பட்டி |
| Taluk | : பாப்பிரெட்டிப்பட்டி |
| District | : தருமபுரி |
| Religion | : Hindu |
| Age | : 45 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **20.05.2026**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது அதிகாரப்பட்டியில் குடியிருந்துக்கொண்டு லாரி டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது.

சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் ஊத்தங்கரையிலிருந்து அதிகாரப்பட்டி நோக்கி எனது இருச்சக்கர வாகனத்தில் வந்துக்கொண்டிருந்தபோது அ.பள்ளிப்பட்டி காவல் நிலைய போலீசார் ஆஞ்சிநேயா பெயர் பதிக்கப்பட்ட லாரி ஒன்றை பார்வையிட்டு கொண்டிருந்தார்கள். மேலும் அந்த வழியாக சென்ற என்னிடம் லாரியை கைப்பற்றியதற்காக ஒரு சாட்சி கையொப்பம் பெற்றார்கள்.

இன்று என்னிடம் காட்டப்படும் லாரி அடங்கிய கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **லாரி அடங்கிய கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

நான் எதற்காக இந்த வாகனத்தை எடுக்கிறீர்கள் என கேட்டதற்கு போலீசார் ஒரு மாதத்திற்கு முன்பு இந்த லாரியில் தான் ஆடுகளை திருடி சென்றார்கள் என்றும்,

அதற்காக இன்று லாரியை கைப்பற்றுவதாக கூறினார்கள். வழக்கு தொடர்ந்த போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் கையெழுத்து செய்த தேதி மாதம் தெரியாது என்றால் சரிதான்.

நான் ஒரு கையொப்பம் மட்டும் தான் செய்தேன்.

நான் கையொப்பம் போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

லாரியை யாரிடமிருந்து கைப்பற்றினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது.

நான் கையொப்பம் செய்ததை பின்னிட்டு போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பெறவில்லை.

நான் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர், பாப்பிரெட்டிபட்டி**